சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதிவருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண௵ ஆடி மீ ககூஉ (1944 ஆகஸ்ட் மீ 3 வியாழக்கிழமை) [இல நுரு

## யுத்தச்செய்தித் திரட்டு

### பர்மாப் போர்முனை

தென்கிழக்கு ஆசிய உயர்தர ராணுவபீட அறிக்கை கூறுவதாவது:-

மிட்கினு நகருக்கான போரில் சீனர் பங்குபற்றிக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் படைப்பிரிவுகள் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. டாமுவைப் பாதுகாத்து நிற்கும் ஜப்பானிய பின்னணிப் படைகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மோசமான காலநிலைமை காரணமாக மெதுவாகவே நடைபெறுகின்றன. நமது பீரங்கிப்படை டாமுவுக்கு வடக்கே 8 மைல் தூரத்தில் பலெஸ்ரஸ்தாவுக்கு மேலேயுள்ள இபக்திரப் பீரங்கித் தளங்கள் மீது குண்டுகளைப் பொழிகின்றது. இந்தியத் துருப்புகள் டிடிம ரஸ்தாவுக்கு சமீபத்தில் இம்பாலுக்குத் தெற்கே 40 மைல் தூரத்திலுள்ள சுராசந்பூரைக் கைப்பற்றியிருக்கின்றன. ஆனல் இப்பகுதியில் சத்துரு பீரங்கிப் படையின் எதிர்ப்புச் சிறிது இருக்கின்றது. 5 டாங்கிகளையும் அநேக மோட்டார் வாகனங்களையும் 2 பீரங்கிகளையும் சத்துரு விட்டுச் சென்றிருந்தான்.

### ருஷ்யப் போர்முனை

மாஸ்கோவில் வெளியிடப்பட்ட சோவியத் அறிக்கை கூறுவதாவது:

ஜூலைமாதம் 30ம் தேதி நமது துருப்புகள் எல்லா அரங்கங்களிலும் வலுத்தாக்குதல் நடத்தி முன்னேறின. நூற்றுக்கதிகமான இடங்கள் கைப்பற்றப்பட்டன. டி வின்ஸுக்கு மேற்கே நமது துருப்புகள் தொடர்ந்து வலுத்தாக்குதல் நடத்தின. ஜெர்மன் படைகளுக்கும் செஞ்சேனைக்கும் ஒரு இடத்தில் நடைபெற்ற மூர்க்கமான சண்டையில் யுத்தகளத்தில் 15000 ஜெர்மானியர் கொலைப்பட்டனர். 2000 பேர் சரணடைந்தனர்.

அன்று 101 ஜெர்மன் டாங்கிகள் சேதப்படுத்தப்பட்டன. 20 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

மார்ஷல் ஸ்டாலின் விடுத்த அறிக்கை யொன்று கூறுவதாவது:

மிற்றுவா, பில்விஸ்கயா, மரியாம்போல், சென்டாமிரோவ், சைனி முதலிய நகரங்களைச் செஞ்சேனை பிடித்துவிட்டன. வார்சோ நகரை நமது படைகள் நெருங்குகின்றன.

### பிரெஞ்சுப் போர்முனை

நேசதேச ராணுவ தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை பின்வருமாறு:-

காமன்ட் பகுதியில் பிரிட்டிஷ் படைகள் பிரமாண்டமான ஒரு தாக்குதலை ஆரம்பித்தன. தாக்குதல் நடைபெறுமுன் விமானத் தாக்குதல்களும் நடைபெற்றன. கார்மண்டியிலுள்ள அமெரிக்கப் படைகள் தொடர்ந்து முன்னேறுகின்றன. டாங்கிகளையும், காலாட் படைகளையும், பீரங்கிகளையும் கொண்டு ஜெர்மானியர் எதிர்க்கின்றனரென்றும் அவர்களைச் சத்துருப் படைகள் கிழக்கிலிருந்து தாக்குகின்றனவென்றும் தெரிகிறது. அமெரிக்க பகுதியில் நேசப்படைகள் பிரெஹாலேத் தாண்டிக்கொண்டு முன்னேறி வருகின்றன. காவ்ரே என்னுமிடம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இதுவரை 10,000 ஜெர்மன் வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

காமாண்டிற்கு கீழே 3 மைல் தூரம் பிரிட்டிஷ் படைகள் முன்னேறியிருக்கின்றன.

கார்மண்டியிலிருந்து வில்லியம் எழுதுவதாவது:—

பிரெஹால், காவ்ரே, பெர்சி ஆகிய மூன்று நகரங்களை அமெரிக்கத் துருப்புகள் கைப்பற்றியிருக்கின்றன. அமெரிக்கத் தாக்குதல் ஆரம்பமானதிலிருந்து இதுவரை 8200 ஜெர்மன் வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

### பஸிபிக் போர்முனை

குவாம் தீவிலுள்ள ஓர்டி தீபகற்பத்தை அமெரிக்கப்படைகள் கைப்பற்றிக்கொண்டனவென்று பஸிபிக் பிராந்தியத்தின் பிரதம தளகர்த்தரான அட்மிரல் செஸ்ட் நிமிட்ஸ் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-ஜப்பானியரின் கட்டுப்பாடான எதிர்ப்பு கடந்த வெள்ளிக்கிழமையே நின்றுவிட்டது. கடற்தளமும் விமானநிலையமும் இப்போது அமெரிக்கரின் வசத்தில் இருக்கிறது.

ஓர்டி தீபகற்பத்தில் பெருந்தொகையான தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன.

---

### நேசநாடுகளோடு துருக்கி சேரும்

லண்டன் ஜூலை 29—

சீக்கிரத்தில் துருக்கி நேசநாடுகளோடு சேரும் விதத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் எனத் தெரிகிறது. இது விஷயமாக சீக்கிரத்தில் அறிக்கை வெளியாகுமென பிரிட்டிஷ் அரசாங்க வட்டாரங்களில் கூறப்படுகிறது. ஆனல் இதில் அதிக தாமதமும் இராதாம்.

ஜெர்மன் தூதர் வான் பேப்பன் துருக்கி பிரதம மந்திரி ஸரோஜகுலுவுடன் சம்பாஷிப்பதற்காக அங்காராவுக்குப் புறப்பட்டுப் போயிருப்பதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது. தற்போதைய நிலைமை நீடிக்கவேண்டும் என்பதற்காக அவர் அதிக முயற்சி செய்வதாகவும் தெரிகிறது. ஜெர்மன் அதிகாரம் முன்போல இனியும் [illegible] கை ஏற்படும்படி [illegible] செய்ய முடியவில்லையாம்.

## இந்தியச் செய்திகள்

### காந்தி ஜின்னாவைச் சந்திப்பார்

பம்பாய் ஜூலை 30

காந்திஜியும் ஜின்னாவும் ஆகஸ்டு மாதம் இரண்டாவது கிழமையில் பம்பாயில் சந்தித்துப் பேசுவார்களென்று இங்கு உலாவும் செய்திகளிலிருந்து தெரிகிறது. காங்கிரஸ் லீக் சமரசத்தைப்பற்றி விவாதிக்க ஜின்னாவைச் சந்தித்துப் பேசவிரும்புவதாக அவருக்கு மகாத்மா ஒருகடிதமெழுதியிருப்பதாயும், மகாத்மாவை பம்பாயில் சந்தித்துப் பேசத் தயாராயிருப்பதாக ஜின்னா பதிலளித்திருப்பதாயும் அறியப்படுகிறது.

காங்கிரஸ்-முஸ்லிம்லீக் சமரசத்துக்காக ராஜாஜி தயாரித்திருக்கும் திட்டத்தை மகாத்மா காந்தி உத்தியோக தோரணையில் ஜின்னாவுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

### பிரிட்டிஷ்மாதின் எச்சரிக்கை

மாஞ்செஸ்டர் ஜூலை 29—

ஸ்திரீகள் சர்வதேச சங்கத்தின் தலைவரான டொரோதி விபாண்ட் பிரௌன் இன்று "மாஞ்சஸ்டர் கார்டியனில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"காந்திஜியின் சமீப யோசனைகளை முன்னிட்டு பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் இந்தியாக் கொள்கையைப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் இந்தியத் தலைவர்களுடன் சீக்கிரத்தில் சமரசம் ஏற்படுவதற்கான வழிவகைகளைத் தேடவேண்டும் என்றும் இச்சங்கம் விரும்புகிறது. சமரஸத்துக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் புதிய சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொள்ளாவிட்டால் பிரிட்டிஷ் இந்திய வருங்கால உறவிற்கே ஆபத்து நேரிடும்"

### காந்திஜி திட்டத்தில் புதிய மாறுதல்

லாகூர் ஜூலை 28—

முஸ்லிம்லீக் காரிய நிர்வாகசபையின் பிரபல கூட்டமாகக் கருதப்படக்கூடிய கூட்டத்தில் கலந்துகொள்ளத் தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்துகொண்டிருக்கின்றனர்.

காங்கிரஸ்லீக் சமரசத்தைப்பற்றிய ராஜாஜி திட்டங்களையொட்டி நடைபெறவிருக்கும் விவாதத்தின் போக்கையே மாற்றக்கூடிய ஏதோவொன்று திடீரென்று நிகழ்ந்திருப்பதாகத் தோன்றுகிறது.

ராஜாஜி திட்டங்களை அங்கீகரித்து பஞ்சகனியிலிருந்து ஜனாப் ஜின்னாவிற்கு காந்திஜியின் கடிதமொன்று கிடைத்திருப்பதாக இங்கு கூடியிருப்பவர்களிடையே பேசப்பட்டு வருகிறது. காங்கிரஸ் லீக் சமரசமேற்படுத்த காந்திஜி [illegible] முயற்சிகள் செய்வாரென்றும் பஞ்சகனியிலிருந்து இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. ஜின்னாவிற்குக் கடிதம் எழுதியதாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன் காந்திஜியின் வேலைத்திட்டம் திருத்தியமைக்கப்படுமெனக் குறிப்பிடும் செய்தி கிடைத்ததிலிருந்து இங்குள்ள அரசியல்வாதிகளிடை நல்ல விளைவேற்பட்டிருக்கிறது.

### 'காந்திஜியும் ராஜாஜியும் சரணாகதி அடைந்தனர்'

பம்பாய் ஜூலை 30

சர் சிம்மன்லால் செதல்வாட் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

யுத்த நிலைமையைப் பயங்கரமாயிருந்து பிரிட்டனுக்கு எல்லாவித உதவியும் அவசியமான சமயத்தில் அவ்வித உதவியளிக்கக் காங்கிரஸ் தலைவர்கள் மறுத்தது மட்டுமன்றி தாங்கள் வகித்து வந்த பொறுப்பு வாய்ந்த பதவிகளைக் கைவிட்டுச் சட்டமறுப்பை ஆரம்பித்து இந்தியாவிலிருந்து வெளியேறுக என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றி யுத்த முயற்சிகளுக்கே பாதகம் விளைத்தனர். இப்பொழுது யுத்த நிலைமை அற்புதமாகப் பிரிட்டனுக்காதரவாகத் திரும்பியதும் இப்பொழுது காங்கிரஸ தலைவர்கள் பெருந்தன்மை காட்டி இந்தியாவிற்குச் சுதந்திரமளிக்கும்படி பிரிட்டனிடம் கெஞ்சுகின்றனர். வெளிப்படையாக இந்நிலையை எடுத்துக்காட்டியதிலிருந்து பிரிட்டனைப் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளும்படி திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார் கோருவது எவ்வளவு பொருந்தாத மனப்பான்மை என்பதை எடுத்துக்காட்டும்.

முஸ்லிம் லீக் விஷயத்திலும் காங்கிரஸ் நடந்துகொண்ட விதம் பிரிட்டனிடம் நடந்துகொண்டது போலவேயிருக்கிறது. லீக் ஆரம்ப நிலையிலிருக்கும் பொழுது வகுப்புப் பிரச்னையேயில்லையென காங்கிரஸ் கூறியது இருப்பின் சுதந்திரம் பெற்றபின் அதைத் தீர்த்துக்கொள்ளலாமெனவும் குறிப்பிட்டது. பாகிஸ்தான் பாபகரமானதெனக் காந்திஜி ஒரு சமயம் கூறினர். 1942ம் வருடம் மே மாதம் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி இந்திய சமஷ்டியைச் சேர்ந்த எந்தப் பாகமும் விலகிக்கொள்ள சுதந்திரமளிக்கக்கூடாதென தீர்மானமொன்றையும் நிறைவேற்றியுள்ளது.

ஜனாப் ஜின்னாவிற்கு இப்பொழுது பலம் அதிகரித்து அவர் சக்தியுள்ளவராயிருக்கிறார். திரு. ராஜகோபாலாச்சாரியாரும் காந்திஜியும் பூரண சரணாகதியடைந்து நாட்டின் நலத்திற்கும் முஸ்லிம்களுக்குமே தற்கொலை செய்துகொள்வதாகுமென சிறந்த யோசனையாளர்கள் மதிக்கும் ஒரு வழியைப் பின்பற்ற ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵
ஆடி௴ ௧௯ வியாழக்கிழமை


## யுத்தம் விரைவில் முடியுமா?

ஊரவர் பாதுகாப்புத் தலைமை உத்தியோகத்தராகிய ஸேர். ஒலிவர் குணதிலகை சென்றவாரம் யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்து இலங்கையில் உணவுப்பொருள் விருத்திவிஷயமாகப் பேசியபோது "இப்பொழுது நடக்கும் யுத்தம் இந்த ஆண்டின் கடைசிப்பகுதியில், இல்லையேல் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் வெற்றியோடு முடிதல்கூடும்; யுத்தம் இப்படி முடிந்தாலும் எங்கள் உணவுப்பொருட்சண்டை முடியாமற் பின்னரும் நடக்கும்" என்னுங் கருத்தமையக் கூறியுள்ளார்; இந்தப் பயங்கரமான உலக யுத்தம் ஸேர். குணதிலகை சொல்வதுபோல, இந்த ஆண்டின் இறுதியிலல்ல, அடுத்த ஆண்டு தொடக்கத்திலல்ல, இந்தமாச ஈற்றிலே இல்லையேல் அடுத்தமாச ஆரம்பத்திலே முடிவெய்துமென்றால் உலகத்திலுள்ள மக்களனைவர்க்கும் பேரானந்தமாகவே இருக்கும். ஆனால் ஸேர். குணதிலகை சொன்னகால எல்லையுள் இந்த யுத்தம் முடியுமோ என்பதை எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார். ஸேர். குணதிலகை ஒருபோது ஐரோப்பாக்கண்டத்திலே நிகழுவதாகிய யுத்தத்தைக் குறித்தே காலவெல்லை வகுத்துக் கூறினாரென்றால், அதுவும் பொருந்தாதே. ஏனென்றால் ஐரோப்பாக்கண்டத்துள்ள சிறந்த இராசதந்திரிகளும் யுத்த நிபுணர்களும் இந்த ஐரோப்பிய யுத்தம் இனி இரண்டு மாசங்களுள் ஜயத்தோடு முடிந்துவிடுமென அபிப்பிராயப்பட்டார்களெனக் காணவில்லையே.

இனி, எங்கள் உணவுப் பொருட்பஞ்சத்திலிருந்து நாங்கள் மீட்சியடையவேண்டுமானால், பிருத்தானியர் முதலாம் ஐக்கியராச்சியத்தினர் யப்பானியரை வென்று தாம் இழந்த பர்மா முதலிய இடங்களை மீளப்பிடித்து ஆளுங்காலம் வரவேண்டுமல்லவா? யப்பானியருக்கும் ஐக்கியராச்சியத்தினருக்குமிடையே நிகழும் யுத்தம் இந்த 44ம் ஆண்டின் இறுதியிலே, இல்லையேல் அடுத்த 45ம் ஆண்டின் தொடக்கத்திலே, தெய்வச்செயலால் முடிந்தாலொழிய மனுஷ முயற்சியினால் முடியுமென ஸேர். குணதிலகை நம்பியிருப்பது ஆச்சரியமல்லவா? வருகிற 1946ம் ஆண்டிறுதி முந்து யப்பானை வெல்லுவதும் அருமை கீழ்ப்[illegible]

படுத்துவதும் சாத்தியமான கருமமல்லவென்பது அரசதந்திரிகள், யுத்த அனுபவம் படைத்தவர் பலர் கொண்ட அபிப்பிராயமாகும். அமெரிக்க பிரசாதிபதியாகிய மிஸ்ரர் றூஸ்வெல்ற் 'எங்களுக்குப் பூரணவெற்றி வருதற்கு இன்னும் நான்கு வருடங்களாயினுஞ் செல்லவேண்டும்' என்று ஒரு சந்தர்ப்பத்திலே கூறியிருக்கிறார். அவர் கூற்றின்படி இந்த யுத்தம் பூரணமாக முடிதற்கு 1948-ம் ஆண்டு வரையிற் செல்லுமென்பது அறியக்கிடக்கின்றது.

யப்பானியர் எவரும் காத்திராதபிரகாரம் சடுதியில் பிருத்தானியருடன் மாறுபட்டு யுத்தஞ்செய்யத்தொடங்கி, எங்களுக்கு அரிசி நெல் முதலாம் உணவுப்பொருள்களை உதவிவந்த பர்மா முதலிய நாடுகளைக் கைப்பற்றியமையினாலேயே இந்த உணவுப்பொருட்பஞ்சம் இங்கே நேர்ந்ததென்பது எவருமறிந்த இரகசியம். இப்பொழுதும், உணவுப்பொருட்பஞ்சத்தை அறவே யொழிக்கவேண்டுமாயின் எங்கள் ஐக்கியராச்சியத்தினர் யப்பானியரை முறியடித்துத் தாம் இழந்த நாடுகளை மீளப்பெறுதற்கான முயற்சிகளை இனிமேல் செய்யவேண்டும். இதற்கிடையில் இலங்கையில் உணவுப்பொருள்களை இயன்றவரையில் விருத்தி செய்வதோடு, இந்தியாவிலிருந்து அரிசி நெல் உணவிற்குரிய ஏனைய பொருள்கள் வெஞ்சனங்கள் முதலியனவும், அவுஸ்திரேலியாவிலிருந்து கோதுமையரிசி மா முதலியனவும் இங்கே தடையின்றி வருதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும்.

### ப்ளோஸ்டிமீது குண்டுவீச்சு

லண்டன் யூலை 29—

நேற்று ரூமேனியாவிலிருக்கும் ப்ளோஸ்டி எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளையும் வடக்கிலிருக்கும் ப்ராஸிலு புகையிரதத்தளத்தையும் நேச வெடிகுண்டு விமானங்கள் தாக்கின. இதுதவிர எதிரிப் போக்குவரத்துகளும் அதிகம் பாதிக்கப்பட்டன. வடக்கு இத்தாலியிலும், யூகோஸ்லேவியாவிலும் நேசக்குண்டுவீச்சு இருந்தது. 12 எதிரி விமானங்கள் நாசமாயின. 28 நேச விமானங்களும் நஷ்டமாயின.

### அறிவித்தல்

யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம் ஆண்டு ஆகஸ்ட்௴ 7-ந் திகதி திங்கட்கிழமை முதல் 13-ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருட்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1. கடலைப்பருப்பு 2 அவுன்ஸ்
2. சீனிப்பயறு 1 அவுன்ஸ்
3. மல்லி 1 அவுன்ஸ்
4. வெம்பாய்வெங்காயம் ½ அவுன்ஸ்

(2) தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெறலாமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

E. B. திசவீரசிங்கம்,
வடமாகாண [illegible],
யாழ்ப்பாணம் [illegible]
G 57 3-8-44

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—12)

### "முகம்மறுக்க முடியாமல் அருந்தினான்"

அழைத்த பெண் அவ்விருவரையும் முன் செல்லவிட்டுத் தான் அவர்களைத் தொடர்ந்து போக, முந்தியே அங்கே போய் ஒரு ஸோபாவிலிருந்த பாலசிங்கன் இருக்கை விட்டெழுந்து "வாருங்கள், வாருங்கள், இப்படி இருங்கள்" என்று தான் இருந்த ஸோபாவில் அவர்களிருவரையும் இருத்தி அவர்கள்மத்தியிலே தானும் இருந்தான்; "நான் காலதாமசஞ் செய்யாமல் தாகத்திற்கு ஏதும் குடித்துவிட்டு வரலாமென்றெண்ணி உங்களைப் புறத்தேநிற்கச்செய்து இங்கே வந்தேன்; ஆனால் இந்த ரஞ்சிதத்திற்கு உங்களைப் புறங்கடையில் நிற்கவிட்டு நான் இங்கே வந்திருப்பதுபிரியமில்லை; இவளொரு பெருந்தன்மையுள்ள பெண்; இவளோடு பழகி நாலுநாள் ஊடாடியவர்கள் பிறகு இவளை விட்டுப் பிரிய மனம் ஒருப்படார்கள்; இரஞ்சிதம் என்ற பெயர் இவளுக்குக் காரணப் பெயரென்று சொல்லினும் பிழையாகாது. நல்லாருடைய சிநேகம் நுனியிலிருந்து அடிப்பக்கம் நோக்கிக் கரும்பு தின்றதுபோல, அவர்களுடன் உறவாட உறவாடத்தான் இனிக்கும்..." எனப் பாலசிங்கன் சொல்லிக்கொண்டிருக்கும்போது, இவர்களிருவரும் வந்து இருந்தவுடன் மறைந்த இரஞ்சிதம், ஒரு பணிப்பெண் ஒரு தட்டிலே பளிங்குப் பாத்திரங்கள் மூன்று ஏதோ பானம் நிறைந்து வைக்கப்பட்டபடி ஏந்திக்கொண்டு வர, தான் பின்னே வந்தாள்; பணிப்பெண் அந்தத்தட்டை அம்மூவர் சமுகத்தில் நீட்ட, முதற் பாலசிங்கன் அவற்றுள் ஒரு பாத்திரத்திலுள்ள பானத்தை எடுத்து விசுவநாதனிடம் நீட்ட, அவன் அதனை ஏற்றுக்கொண்டு பருகாமலிருந்தான்; மற்றைப் பாத்திரத்தைப் பாலசிங்கன் நீட்ட வீராசாமி வாங்கி அதனகத்துள்ள பானத்தை ஒரு துளியுமில்லாமல் உறிஞ்சிவிட்டு வெற்றுப் பாத்திரத்தைத் தட்டத்திலே வைத்துவிட்டான்; எஞ்சிய பாத்திரத்தைப் பாலசிங்கன் தன் கையில் எடுத்துவைத்துக் குடிக்கப் போகும்போது, விசுவநாதன் குடியாமலிருப்பதைக் கண்டு, "விசுவநாதா, ஏன் தந்ததைக் குடியாமலிருக்கிறாய், வந்த இடத்தில் ஒருவரை விட்டு ஒருவர் அருந்துவது சரியல்லவே" எனலும், விசுவநாதன் "அதைப்பற்றிக் காரியமில்லை, எனக்கு இப்பொழுது தாகமில்லை; நீ உன் தாகத்தைத் தீர்த்துக்கொள்" என்றான். பாலசிங்கன் அயலே விநயமாக நின்ற இரஞ்சிதத்தைக் குறிப்பாகப் பார்க்க, அவள் விசுவநாதனை ஆர்வம் பெருகப் பார்த்து "நீங்கள் யோசியாமற் பருகுங்கள். இது ஏதும் மதுபானமென்று சந்தேகப்படாதீர்கள், இது "ஸ்வீற் அறேஞ்ஜ்" இதைப் பருகுவதினால் ஒரு பாதகமுமில்லை; ஆட்களைப் பார்த்து விளங்கி அவரவர்க்குரிய பானத்தை வழங்க நான் பழகியிருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு விசுவநாதன் கையிலிருந்த பாத்திரத்தைத் தான்வாங்கி மணந்துவிட்டு மீள அவனிடங் கொடுத்தாள். பாலசிங்கனுடைய கேள்விக்கு இசையாத விசுவநாதன் இரஞ்சிதத்தின் இனிய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே முகம் மறுக்கமாட்டாமல் அருந்தினான்; பார்த்துக்கொண்டு பக்கத்திலிருந்த பாலசிங்கன், "நான் கேட்டாற் குடிக்கவொண்ணாது; இரஞ்சிதங் கேட்டாற் குடிக்கலாம் போலும்" என்று புன்னகையுடன் சொன்னான். "இரஞ்சிதத்தின் தோற்றம் கண்ணுக்கு ரஞ்சிதம், வார்த்தை காதுக்கு ரஞ்சிதம், எப்படி மறுக்க முடியும்" என்றான் வீராசாமி. இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு புன்னகை செய்தபடி ஒரு புறத்தே நின்றாள் இரஞ்சிதம். மூவருந் தாகசாந்தி செய்து பின்னரும் சிறிதுநேரம் அங்கிருந்து நாலு வார்த்தைகள் பேசிவிட்டு, இரஞ்சிதத்திடம் விடைபெற்றுக்கொண்டு போவாராயினர். "போய் வாருங்கள்" என்று இரஞ்சிதம் விடைகொடுக்கும்போது, விசுவநாதனை அவள் அன்புடன் பார்த்து "எங்களை மறந்துவிடாதீர்கள்; இனிமேலும் வாருங்கள்" என்று சொல்ல, அவனும் "ஓம், அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டகன்றான்.

### இவளுடைய வரலாறு

"ரஞ்சிதம்" என்ற பெண்ணின் பூரணநாமம் மனோரஞ்சிதம்; இவள் தென்னிந்தியாவிலுள்ள ஒரு கிராமத்திற் பிராமண வருணத்திலே பிறந்தவளென்றும், தன் மரபோடொத்த மரபுடைய ஒரு பிராமணச் சிறுவனுக்கு மனைவியாக இவள் பால்யத்திலே நிச்சயிக்கப்பட்டிருந்தாளென்றும், அந்தச் சிறுவன் இறந்துவிட, இந்தச் சிறுமியை விதவையாகப் பாவித்து இவள் தலையை முண்டிதமாக்குதல் முதலிய கருமங்களைச் செய்ய முயன்றபோது, இவள் புகுந்தவீட்டாரை யறியாமல் ஒளித்தோடிப் போய் அதிக தூரத்திலுள்ள ஒரு பட்டினத்தை யடைந்து அங்கே நாடகக் காரருடன் சேர்ந்து நடித்து மாசவேதனம் பெற்று வந்தாளென்றும், அப்படிவரும்போது நாடகமுதலாளி இவள்மீது கொண்ட தீயநோக்கத்தைக் கண்டு இவள் அந்தப்பட்டினத்தை எவருமறியாதபடி விட்டு நீங்கிக் கடல் கடந்து இந்த ஊரில் வந்து ஒரு தாசியின் அபிமான புத்திரியாக வளர்க்கப்பட்டு வருவாளாயினளென்றும், அந்தத் தாசியே இவளுக்குத் தன் குலத்தொழில்களாகிய பரதநாட்டியம் சங்கீதமென்னும் இவைகளை நன்கு பயிற்றி இவளைத் திறம்படச் செய்தனளென்றும் ரஞ்சிதம் இருக்கும் அந்த ஊரிலுள்ளவர்களும் அயலூரவர்களுஞ் சொல்வார்கள். இரஞ்சிதம் எவர் கண்ணையுங் கவரக்கூடிய வனப்பு வாய்ந்தவள்; சங்கீதத்திலும் பரதநாட்டியத்திலுந் திறமையுடையவள்; உத்தம மெல்லியலாரகத்துச் சொல்லப்பட்ட மேனியுடையவள்; காலத்திற்குஞ் சமயத்திற்கும் ஏற்கத் தன்னையலங்காரஞ் செய்யும் ஆற்றல் பூண்டவள், பதினாறு பதினெட்டு வயசு மதிக்கக்கூடிய பார்வையுடையவள்; ஆனால் உண்மையில் அவள் வயசு இன்னும் பத்து வரையில் மேலதிகமாக இருக்குமென்று அவளுடன் நெருங்கி ஊடாடியவர்கள் சொல்லுவார்கள். தாசித்தொழிலை மேற்கொண்டாளாயினும் அவளுடைய சாதிக்குரிய சில பெருங் குணங்களும் அவளிடத்தில் இயல்பாக வுண்டென்று அவளையறிந்தோர் சொல்லுவார்கள். அவள் சிலசமயத்தில் உண்மையாகவும் நீதியாகவும் நடக்க முயன்றாலும் அவளுடைய "தாய்க்கிழவி" அவளை அங்ஙனம் நடக்கவிடாது, வேட்டுவன் எடுத்த மென்புழுப்போல தன் வசமாக்கிக் கொள்ளுவாள்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்

(இனுவை, வை. அநவரதவிநாயக மூர்த்தி)

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழிதான், முன்னொருகாற் கூடலூர்த் தோற்றிய சங்கமோர் மூன்றினும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் முதலாக் கணக்காயன் மகன் நக்கீரனூர் ஈறாகவுள்ள பல புலவோரானும் ஆராயப்பட்ட பெருமை வாய்ந்தது. இத்தமிழ், மூன்றுவகையாகப் பகுக்கப்பெற்று இயல், இசை, நாடகம் என்ற பெயருடன் வழங்கும். இம்முக்கூறுடைமையாற் கண் மூன்றுடைக் கடவுளை இம்மொழி மானுமென்றலுந் தகும். இவைகள் ஒவ்வொன்றிலும் இலக்கணமும் இலக்கியமும் உண்டு. மூன்றற்கும் பொதுவாகச் சில இலக்கணங்களும் உள்ளன. இம்மூன்றும் தமிழில் ஒரு கொத்தாக வழங்குவதுபோல வேறு பாஷைகளில் வழங்குவதில்லை என்று அறிஞர் கூறுவர். பண்டைக்காற் புலவர் பெருமக்களிற் பலர் இம்மூன்றிலும் பயிற்சியுற்றிருந்தனரென்று தெரிகிறது. 'முத்தமிழ்க்கவி' என்ற பட்டம் சிலருக்கே வழங்கிவந்திருக்கிறது.

சுப்பிரமணியப்பெருமானின் அம்சமாகிய திருஞானசம்பந்த சுவாமிகளே இம்முத்தமிழையும் இடையறாது பயின்ற காரணத்தால் 'முத்தமிழ் விரகன்' என்னும் திருநாமம் பெறுவரெனில் அம்முத்தமிழ்ப் பெருமை வரித்தற்கெளிதாமோ.

இம்முத்தமிழ்க்கு இலக்கணங் கூறினோர் அகத்தியமாமுனிவரேயாகும். இதற்குச் சான்றுபல தொன்னூல்களினும் அகத்தியம் முத்தமிழிலக்கணமெனக் கூறுதலேயாகும். பழைய உரைகளிற் காணப்படும் மேற்கோள் வழக்கால் சிற்றகத்தியம் பேரகத்தியம் என இரண்டு நூல்கள் இருந்து வந்தனவென்று தெரிகிறது. இனிச் சிறிது இம்முத்தமிழ் ஒவ்வொன்றின் இயல்பென்னென்று நுணுகி ஆராய்வாம்.

இயற்றமிழானது எல்லையோடு கூடிய இலக்கணம் அமைந்த தமிழ். இசைத்தமிழானது இராகம் தாளம் பாடல் மூன்றுங் கவர்படாதிசைக்குமியைபிறது. நாடகத் தமிழானது, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை முதலிய சுவைகள் பயக்குமாறு கதை தழுவி இராகம், தாளம், பாட்டு ஆகியவற்றோடு நடித்தலாம். இலக்கியங்களுள் சிலப்பதிகாரம் மூன்று தமிழும் விரவப்பெற்றிருத்தலின் முத்தமிழ்க் காப்பியம் என்று பாராட்டப்படும்.

"ஒருந்தமிழொரு மூன்று முல
கண புறவகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதிகாரம்'

முத்தமிழும் விரவப்பெற்ற காப்பியங்கள் இந்நூலையன்றி வேறு இக்காலத்துக் காணப்படவில்லை.

இயற்றமிழ்க்குரிய இலக்கணமாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்பனவாம். இவைகளை இற்றைநாட் கூறும் நூல்கள், தொல்காப்பியம், இலக்கண விளக்கம், வீரசோழியம், தொன்னூல், அவிநயம், முத்துவீரியமென்பனவாம். இவற்றுள் முன்னைய இரண்டுமே ஐந்திலக்கணங்களும் நிரம்பியுள்ளன.

தொல்காப்பியம் என்பது தொல்காப்பிய முனிவரால் செய்யப்பட்டது. அம்முனிவர் தொல்காப்பியக்குடியிற் பிறந்தவர். அந்நூலுக்கு உரைசெய்தவர்கள் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையாரென்னும் அறுவரென்று இப்போது தெரிகிறது. அவ்வுரைகளால் மாபுராணம் முதலாகப் பல இலக்கணநூல்கள் முன்பு இருந்தனவென்பதை அறியலாம்.

இலக்கண விளக்கமென்பது திருவாரூர் வைத்தியநாத தேசிகரென்னும் சைவப் பெரியாரொருவரால் இயற்றப்பெற்றது. "திருவாரூரிற் திருக்கூட்டத்திற்றமிழ்க்கிலக்கணமாகிய வைத்தியநாதன்" என்று இந்நூலாசிரியர் இலக்கணக் கொத்துடையாரால் பாராட்டப்பெற்றுள்ளார். இந்நூலைக் 'குட்டித்தொல்காப்பியம்' என்று சிலர் வழங்குவர். இந்நூலில் ஐந்திலக்கணங்களோடு பொருத்த இலக்கணமும் பிரபந்த இலக்கணமும் கூறப்பட்டிருக்கின்றன. பொருத்த இலக்கணத்தையும் பிரபந்த இலக்கணத்தையும் இயற்றமிழிலக்கணத்திற் சேர்த்து வழங்குவதும் உண்டு.

வீரசோழியமென்பது பௌத்த சமயத்தவராகிய புத்தமித்திரரால் இயற்றப்பெற்றது. பெருந்தேவனார் அதற்கு உரை எழுதியவர். இக்காலத்திற் காணப்படாத பல பழைய சூத்திரங்களும் செய்யுட்களும் அந்நூலின் உரையிற் காணப்படுகின்றன. இவைகள் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டனவென்பது தெரிகிலது.

தொன்னூலுக்கு ஆசிரியர் வீரமாமுனிவர். இவர் தமிழ் வழங்காத அயல்நாட்டிற் பிறந்து வளர்ந்தவர். பின் தமிழ்நாட்டுக்கு வந்து, தக்க பண்டிதர்களிடம் தமிழை நன்கு கற்று அம்மொழியின் கண் மிக்க அன்பு பூண்டு இத்தொன்னூலாகிய இலக்கணத்தையும் தேம்பாவணி முதலிய இலக்கிய நூல்களையும் இயற்றினர். இந்நூலில் ஐந்திலக்கணங்களுமன்றி வேறு சில விசேடப்பகுதிகளும் கூறப்பெற்றுள்ளன.

அவிநயம் என்னும் நூல் தொல்காப்பியத்திற்குக் காலத்தால் முந்தியது என்பது மயிலைநாதருடைய உரையால் அறியக்கிடக்கின்றது.

முத்துவீரியம் என்னும் இலக்கணநூல் உறையூரிலிருந்த முத்துவீரவாத்தியார் என்பவரால் இயற்றப்பெற்றது. இந்நூல் சூத்திரங்களால் ஆகியது. இதற்கு உரை எழுதியவர் திருப்பாற்கடனாதன் கவிராயரென்பார்.

நன்னூல் நேமிநாதம் என்னும் நூல்களில் எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் மட்டுமே கூறப்பட்டிருக்கின்றன. நேமிநாதம் என்பது குணவீரபண்டிதரால் இயற்றப்பெற்ற வெண்பாக்களாலாகிய நூல். இதில் அரிய இலக்கண விதிகள் அமைந்துள்ளன. இதற்குச் சிறந்த தோருரையுமுண்டு.

மூன்றாவதாகிய பொருளிலக்கணம் அகப்பொருளிலக்கணம், புறப்பொருளிலக்கணம் என இருவகைப்படும். அகப்பொருளைப்பற்றித் தனியே கூறும் இலக்கணங்கள் இறையனாரகப்பொருளும், நாற்கவிராயநம்பி அகப்பொருளும், மாறனகப்பொருளுமாம். புறப்பொருளுக்குரிய இலக்கணநூல்கள் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியனவாம்.

யாப்பிலக்கணத்தை மட்டும் தெரிவிப்பன, யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையுமாம். இவற்றுள் முதலாவது சூத்திரங்களாலும் இரண்டாவது கட்டளைக் கலித்துறைகளாலும் அமைந்தவை. இந்நூல்கள் சைனபண்டிதர்களாலே இயற்றப்பட்டன. இவைகளின் மேற்கோள்கள் பல சைனமத சம்பந்தமாக [illegible] களைப் படித்து சைவ வைணவ சமயத்தினர் பாராட்டுதற்கு மனமில்லாதிருக்கின்றனர். இவ்விலக்கணத்தின் மேற்கோள்களாக முறையே சிதம்பரச் செய்யுட்கோவை, பாப்பாவினமென்று இரண்டு நூல்களை இக்காலத்தில் வழங்குகின்றன.

அணியிலக்கணத்தை மட்டும் தெரிவிக்கும் நூல்கள் அணியியல், தண்டியலங்காரம், குவலயானந்தம், மாறனலங்காரமென்பவை. தண்டியலங்காரத்தில் முப்பத்தைந்து அணிகள் கூறப்பெற்றுள்ளன. மாறனலங்காரம் என்னும் நூலில் கூறப்பெற்றுள்ள பொருளணிகளின் தொகை அறுபத்துநான்கு.

பொருத்த இலக்கணத்தையும் பிரபந்த இலக்கணத்தையும் கூறும் நூல்கள் பன்னிருபாட்டியல், இந்திரகாளியம், வருணப்பாட்டியல், வச்சணந்திமாலை அல்லது வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், [illegible] பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல் முதலியவை.

(வரும்)

## மதிப்புரை

### சைவசித்தாந்த உண்மை (ஆங்கிலத்தில்)

தமிழ்ப் பயிற்சியிற் குறைந்த ஆங்கிலக்கல்வியுடைய மாணவர்களின் உபயோகத்திற்காக சைவசித்தாந்த உண்மைகள் அவ்வப்போது இந்துசாதன வாயிலாக விஞ்ஞான சாத்திர விற்பன்னரொருவரால் எழுதி வெளியிடப்பட்டன. அவை இப்போது புத்தக ரூபமாக யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்பட்டன. அப்பிரதியொன்று என்னுடைய பார்வைக்கு வந்தது. அது சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னும் அழகோடு நல்ல முறையில் எழுதப்பட்டுளது. ஆசிரியரின் சாத்திர அறிவை நன்கு புலப்படுத்துகின்றது. ஆசிரியர் சைவசித்தாந்த சாத்திரங்களை முறையாகக் கற்ற பரம்பரையைச் சேர்ந்தவரென்றும் இப்போது அவர் பலருக்குச் சாத்திரங்களை முறையாகப் போதித்து வருகிறாரென்றுங் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். அவர் தமையனாரும் சாத்திர விற்பத்தியில் சிறந்தவரென்று அறிந்தபோது எனது ஆனந்தத்திற்கு அளவில்லை. இப்புத்தகத்தை எழுதி உபகரித்த ஆசிரியருக்கு யாமெல்லாம் பெரிதும் கடப்பாடுடையேம்.

சைவசித்தாந்த உண்மைகளை ஆங்கிலத்தில் விளக்கத்தக்க நூல்களில்லாக்குறைவால் பலர் சைவம் இன்னதென்று அறியக்கூடாத நிலையிலுள்ளனர். ஆங்கில அறிவுடையவரெல்லாம் இராமகிருஷ்ண மடத்தார்வெளியிடும் ஆங்கில நூல்களை வாசித்துச் சங்கரமதக் கொள்கைகளே மேலானதாகக் கருதி இடர்ப்படுகின்றனர். இதனால் சங்கரமதக் கொள்கைகளே பரவுகின்றன. பழைய சைவக் கொள்கைகள் அறியப்படாமற் போகின்றன. இக்குறையை ஒருவாறு நீக்க வந்தது இப்புத்தகமெனலாம்; இது இருபாகமுடைத்து. முற்பாகம் சைவசித்தாந்தம் இன்னதென்பதை நிரூபிக்கின்றது. பிற்பாகம் சிவஞானசித்தியாரிலுள்ள உண்மைகளைச் சுருக்கி விளக்குகின்றது. இந்நூல் மாணவர்களுக்கேயன்றி எல்லாருக்கும் ஏற்றதாகும். சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் இந்நூலுக்கு அணிகலனாக எழுதியுபகரித்த முகவுரையே இதன் மேன்மையைக் காட்டாநிற்கும். பிரதியொன்றின் விலை அணா எட்டு. இது மிகக் குறைந்த விலையாகும். ஒவ்வொரு சைவரும் இதனை வாங்கி ஆதரிப்பாராக.

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை
18-6-44

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி ஆகஸ்ட் 4

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.30 கே பி பாக்யலக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே பி பாக்கியலக்ஷ்மிபாட்டு 2 தமிழில்செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 கும்பகோணம் சாரநாயகி பாட்டு 5-40 குரான்ஷரீப் 6 டி எஸ் எஸ் மீனாட்சிசுந்தரம்பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40கிராமநிகழ்ச்சிகள் 7-10ஷபிபாத் 7-20 தனிப்பாடல்கள் 7-30 அறிவிப்புன் 7.35 தமிழில் செய்திகள் 7-45 தலைப்பேமெட்டு நாடகம் 8 டி எஸ் எஸ் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-45 கும்பகோணம் சாரநாயகி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை† 10-30 முடிவு:

### சனி ஆகஸ்ட் 5

காலை: 7-45 கீதாரம்பம் 7-50தமிழில் செய்திகள் 8 டி என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் 8–15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலைஇசை 9 முடிவு.

1 கே எஸ் அனகிரிசாமிவயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கதம்பம்† 2 தமிழில் செய்திகள் 2 05 வி அப்பாசாம்பாள் பாட்டு 2-30 முடிவு.

மாலை: 5 வி அப்பாசாம்பாள் பாட்டு 5-40 திருவரங்கக் கலம்பகம் 6 கே எஸ் அனகிரிசாமி வயலின் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 பணத்திற்குப் பண்டம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 9-15 சுத்தானந்தபாரதி பாடல்† 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கர்நாடக ராகங்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு ஆகஸ்ட் 6

காலை: 7-45கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 பழனி விஜயலக்ஷ்மி† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இசைக்கதம்பம் 9 முடிவு.

12 கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் ஆர் ஸ்ரீனிவாசஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05கதம்பம்† 2-30 முடிவு.

மாலை: 5 என் ஆர் ஸ்ரீனிவாச ஐயங்கார்பாட்டு 5-40 தேவாராதனை 6 இசைக்கதம்பம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 உழவன் முன்னேற்றம்பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே வெங்கிடாத்திரிபாகவதர் வீணை 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஸ்வாஜதி 10 இசைவேளை† 10-30 முடிவு.

### திங்கள் ஆகஸ்ட் 7

காலை: 7-45கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 டாக்கி இசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எ சிட்டிலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருப்பத்தூர் பாக்யலக்ஷ்மி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 எ சிட்டிலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 5-45இசைப்பயிற்சி 6 திருப்பத்தூர் பாக்யலட்சுமி பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 செம்பை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகஸ்வனி சுவண பாடல்கள் 10 இசைவேளை† 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

அற்புதமாவது செயற்கருஞ் செய்கையாம். இது சித்தி என்றும் வழங்கப்படும். இச்சித்தி சாமானியர்களாற் செய்யக்கூடிய தன்று. சித்துணர்ச்சி யுடையவரே சித்தரெனப்படுவர். அவர்களே சித்திகளாகிய அபூர்வச் செயல்களைப் புரியக்கூடியவர். இத்தகையோரைத் தாயுமானவர் வித்தகச் சித்தர்களாமென்று பாராட்டுகின்றார். தமது பாடல்களில் திருவிளையாடற் புராணத்தன் "எல்லாம்வல்ல சித்தரான படலம்" "கல்லானைக்குக்கரும்பருந்தியபடலம்" "அட்டமாசித்தி உபதேசித்த படலம்" "இரசவாதஞ் செய்தபடலம்" முதலியன சிவபெருமான் சித்தவடிவங்கொண்டு அருள புரிந்த அருமைத் திருவிளையாடல்களைக் கூறுவதாம். சைவசமயாசாரியர் நால்வரும் மற்றைய நாயன்மார்களும் செய்த அற்புதங்கள் பல. அவற்றைப் பெரியபுராணம் முதலிய நூல்களால் அறியலாம்.

மேலைத்தேசக் கல்வி பயின்றோர் இச்சித்திகளை இயற்கைக்கு மாறானவையென்று அங்கீகரிப்பதில்லை. இயற்கை சம்பந்தமான விதிகளும் பிரமாணங்களும் மாறக் கூடாதவை யென்று அவர்கள் கருத்து. இது ஆஸ்திகக்கொள்கைக்கு முற்றிலும் விரோதமான நிரீச்சுரவாதமாக முடியும். ஆஸ்திக நம்பிக்கையின்படி இயற்கைவிதிகள் இவ்வுலக வாழ்க்கை நடைபெறுவதற்குக் கடவுளால் ஏற்படுத்தப் பட்டவையாம். இதனால் இயற்கைக்கு அதீதப்பட்ட சித்துலகஇயக்கத்திற்குத் தடை யாதொன்றுமில்லை. சித்துச் சம்பந்தமானதும இவ்வுலக இயற்கைக்கு அதீதப்பட்டதுமான சட்டங்கள் இம்மாயா உலகத்திற் புலப்படுகின்றன. அப்படி அவை தோற்றும்போது இவ்வுலக இயற்கை விதிகளின் இயக்கம விலக்கப்படுகின்றது. சித்தறிவிற் கைவந்தவர்கள் இவ்விதிகளையும் சட்டங்களையும் உண்டாக்கத் தக்கவர்கள். ஓர் சட்டத்தை ஏற்படுத்திய அரசன் அதனை நீக்கவும் நிலைநிறுத்தவும உரிமையுடையவன். அப்படியிராவிடின அச்சட்டத்தை நடாத்த அதிகாரமிலலாதவனாகின்றான். இவ்வுலகச் சட்டத்தையோ விதியையோ ஏற்படுத்திய கடவுளின திருவருள் அச்சட்டத்தை மாற்றவோ அல்லது நிறுத்தி வைக்கவோ உரிமையுடையதா யிருக்கவேண்டியது அவசியம். கடவுளின் திருவருளைப் பெற்றவர்களும இம்மாயா உலகத்தைத் தம் வசப்படுத்தினவர்களுமே சித்துக்களைச் செய்யத் தக்கவர்கள்.

சித்திகள் எல்லா மதங்களுக்கும் உரியவை. முடியாதவையென்று ஒருமதத்தாலும விலக்கப்பட்டவையல்ல. சித்தாற்றலிற் சிறப்புற்றவர்கள் எச்சமயத்தினராயினும் அவர்கள மதங்களுக்குத் தக்கபடியும தங்கள் சித்தறிவுக் கியைந்தபடியும தாங்கள் அனுசரிக்கும மதத்தில தங்களுக்கு இருக்கும உணர்ச்சிக்கு ஏற்றபடியும அற்புதங்களைச் செய்யலாம. கடவுளை எவன ஒருவன எந்த மூர்த்தமாக உபாசித்து அந்த மூர்த்தத்தின மூலமாக அவரது அருட்சத்தியைப் பெறுகின்றானோ அவன தான பெற்ற அருட்பேற்றுக்கொப்பவும் தான காணத்தக்க அளவிற் கேற்பவும இம் மாயா உலகத்தை வசப்படுத்தவல்லுனாகின்றான. அவனுடைய ஆற்றலுக்குத் தக்கவாறு அவன சித்துக்களைச் செய்யலாம். சம்பந்தர் முதலியோர் மாயைக்கு அப்பாற்பட்ட உண்மையைக் கண்ட மெய்ஞ்ஞானிகளாக லின் அவர்கள் செய்தருளிய சித்திகள்மேலானவை. மெய்ஞ்ஞானிகள் இச்சித்திகளை விரும்பாவிடினும் சமயகுரவர்கள் இச்சித்திகளைக் கையாட நேர்ந்தது தங்கள சமயத்தைப் பரப்புதல்நிமித்தமாம். சாமானிய சனங்களிடம் சமயப் பிரசாரஞ் செய்வதிலும் அற்புதங்கள் செய்துகாட்டி அவர்கள் மனதை வசீகரிப்பதே சுலபமான வழி. இதையொட்டியே எமது சம்பந்தர் தாம் இவ்வுலகத்தில வாழ்ந்த சில ஆண்டுகளுக்குள் பல அற்புதங்களைச் செய்து பரசமயங்களை நீக்கிச் சைவத்தை நிலைநாட்டினார். அவர் பரசமயங்களையொழிக்கவும சைவத்தை நிலைநாட்டவும் அவதரித்தவராகலின் அவர் செய்த அற்புதங்கள் மற்றவரினும்பார்க்க எண்ணிக்கையில அதிகமாயின. அவருடைய வாழ்க்கை அற்புதத்தில ஆரம்பித்து அதிலேயே முடிவு பெற்றது. மூன்றும வயதில தேவாரம பாடினதும முத்தியைத் தமது மாயா தேகத்தோடு பெற்றதும அருமையான சித்திகளின பாற்படுவன. இவற்றிற்கு இணையானவை மற்றச் சமயங்களிற் காணலரிது. சிறுபிள்ளையைத் தாய்தந்தையர் அருமையாகப் போற்றிவளர்ப்பது உலக இயற்கை. இதனையொட்டிப்போலும் எமது சம்பந்தப் பிள்ளையாருக்குத் தாயுந் தந்தையுமாகிய அம்மையப்பர் திருமுலைப்பால பொற்கிண்ணத்தில ஊட்டியருளியதும், பொற்றாளம, முத்துப்பல்லக்கு, முத்துச் சின்னம, முத்துக்குடை, முத்துப் பந்தர், உலவாக்கிழி, படிக்காசு முதலிய பரிசுகளைக் கொடுத்தருளியதும், ஏனைய நாயன்மார்கள் முதலியோர் புரிந்த சித்திகளை விளக்கப் புகுந்தால இக்கட்டுரை விரியுமாதலால் அவற்றினை விடுத்தாம்.

சித்தர்கள யோகப் பயிற்சியுடையவர். சித்த வைத்தியமென வழங்கப்படும் தமிழ் வைத்தியம போகர், புலிப்பாணி, அகத்தியர் முதலியவர்களின் முறைகளைக் கொண்டது. இவர்கள் பல வைத்திய நூல்களை இயற்றியுள்ளார். குதம்பைச்சித்தர், பாம்பாட்டிச்சித்தர், அகப்பேய்ச் சித்தர் முதலியோர் சில தமிழ்ப் பாடல்களைப்பாடியுள்ளனர். அவை எளிய நடையில சாமானியர்களும் அறியக்கூடியபடி கொச்சைத் தமிழில யாக்கப்பட்டுள்ளன. நிலையாமையைப் பலபடஎடுத்துரைப்பன, ஆனால் இவை சைவசித்தாந்த சாத்திரக் கருத்துகளுக்கு மாறானவையென்று சிவஞான சுவாமிகள் முதலிய பெரியோரால் ஒதுக்கப்பட்டுள்ளன.

யோகாப்பியாசத்தால் சிலருக்குச் சிலசித்திகள் கைகூடுவதுண்டு. இவர்கள அப்பேற்றை நல்லவழிப் படுத்தாமல ஆசை மேலீட்டால தம்மை எல்லாம்வல்ல சித்தரென்று பறையறைவித்துக் கடைசியில் தாம அடைந்த நிலையினின்றுந் தவறிக் கீழான நிலையை அடைந்து துயருறுகின்றனர். இப்படி உலக விவகாரத்தில் இறங்கத் துணிபுற்ற சுவாமிகள பலருளர். சித்துக்களைப் பற்றித் தாயுமானவர் கூறும பாடலை இங்கே உதாரிக்கின்றேன்.

"கந்துகமதக்கரியை வசமாய்நடத்த
லாங் கரடி வெம்புலி
வாயையுங
கட்டலா மொருசிங்க முதுகின
மேற் கொள்ளலாங் கட்
செவ் யெடுத்தாட்டலாம
வெந்தழலி னிரதம வைத்தைந்து
லோகத்தையும் வேதித்து
விற்றுண்ணலாம்
வேறுருவாம் ... துலா ... விண்ணவரை
மேயவல கொள்ளலாம
சந்ததமு மிளமையோ டிருக்கலாம்
மற்றொரு சரீரத்தினும்
புகுதலாம
சலமேல நடக்கலாம கனலமே
லிருக்கலாம தன்னிகரில
சித்தி பெறலாம
சிந்தையை யடக்கியே சும்மாவிருக்
கின்ற திறமரிது சத்தாகி
யென
... கொண்ட வறி
வான தெய்வமே தேசோ
மயானந்தமே."

## கொழும்பு விவேகானந்த சபை

ஆடி அமாவாசைத்தினத்தை ஒட்டி நிகழும் ஆடிமீ 3ந்திகதி (18-7-44) செவ்வாய்க்கிழமையன்று மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்தசபை மண்டபத்தில் 'கந்தரலங்காரம்' என்னும் பொருள்பற்றியும் ஆடிமீ 4ந் திகதி (19-7-44) புதன்கிழமையன்று வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் 'கந்தரனுபூதி' என்னும் பொருள்பற்றியும் விவேகானந்தசபைத் தலைவரும் அரசாங்கசபை அங்கத்தவருமாகிய திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

வெள்ளவத்தையில நிகழ்ந்திய சொற்பொழிவில் ஆடி அமாவாசைத் தினத்தின விசேடத்தைக் குறித்தும் பிரசாரகர் பேசினார். ஆடிமாதம் தட்சணாயன ஆரம்பமெனவும் பிதிர்களுக்கு விசேட நாளாகிய அமாவாசை ஆடிமாதத்தில வரும்போது அத்தினத்தில தர்ப்பணம முதலிய கிரியைகளைச் செய்வதால அதனால் விசேட புண்ணியபலன ஏற்படுமெனவும கூறினார்.

மேலும் பிரசாரகர் கதிர்காம உற்சவம ஆரம்பிக்கும் இச்சமயத்தில் கந்த கடவுளின பெருமைகளை எடுத்துக் கூறும் நூல்களையும் பிரபந்தங்களையும் பாராயணஞ் செய்யவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திக் கூறினார். அநுபவமே சமயத்தின அடிப்படையெனவும் அதனைப் பெற்ற பெரியார் பலர் பரதகண்டத்தில வாழ்ந்துள்ளாரெனவும் அவருட் சிலர் தம அநுபவத்தைத் தாம அருளிய நூல்களுள் வெளியிட்டிருக்கின்றாரெனவும அத்தகைய பெரியார்களுள் அருணகிரிநாதரும ஒருவரெனவும கூறினார். பின அருணகிரியார் தம் வாழ்க்கையில அநுபவித்த கஷ்டங்களையும அவற்றின் பயனாக எய்திய ஞான நிலையையும்பற்றிக் குறிப்பிட்டார். அப்பெருமானாரின வாக்கு வன்மை 'வாக்குக் கருணகிரி' என்னும ஆன்றோர் கூற்றால் நன்கு புலனாகின்றது.

ஆசிரியர் தம் ஞானாநுபவத்தைக் கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகிய பிரபந்தங்களில பல இடங்களிலும குறிப்பிடுகின்றார்.

'குமரனை மெய்யன்பினால் மெல்ல
மெல்ல உள்ள அரும்பும தனிப்பரமானந்தம் தித்தித்த தறிந்தவன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும்
புளித்தறக் கைத்ததுவே'

எனவும்,

'போக்கும் வரவும் இரவும் பகலும்
புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவும முடிவுமிலலா
தொன்று வந்து வந்து
தாக்கு மனோலயம் தானே தரு
மெனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல
லொணாதிந்த வானந்தமே'

எனவும வரும் திருப்பாசுரங்களில் ஆசிரியர் அநுபவம தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

ஞானத்துறையில் தாம் மேற்கொண்ட முயற்சிகளின பயனாக முருகப்பெருமான திருவுருவத்தைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற அருணகிரியார் அப்பெருமானைத் தரிசிக்க 'நாலாயிரங் கண் படைத்திலனே யந்த நான்முகனே' என ஓரிடத்திற் படைப்புக் கடவுளைக் குறை கூறுகின்றார்.

தம் மனம் மேலான விஷயங்களில் உறைத்து நிற்கத் தவறிய காலங்களிலெல்லாம 'படிக்கின்றிலை பழனித்திருநாமம் படிப்பவர்தாம் முடிக்கின்றிலை எனவும் 'சிந்திக்கிலேன நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன்' எனவும் தம்மைத் தாமே பலவகையிலும கடிந்து கொள்கின்றார்.

முருகப்பெருமான் திருவருளைப் பெறுதற்கு இலகுவான மார்க்கம் மனத்தைப் புலன்வழி போகாது தடுத்து வெகுளியை விடுத்து ஏழைகட்குத் தருமம புரிதலே எனவும ஆசனம் பிராணாயாமம் முதலிய கடினயோக சாதனங்களிலும பக்தி மார்க்கம் அப்பெருமானை அடைதற்கு இலகுவான வழியெனவும் வேறு திருப்பாசுரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

மேலும் பல திருப்பாடல்களில் அருணகிரிநாதர் மரணத்துக்கு அஞ்சாது தீரத்துடன் யமனை எதிர்த்து வாதாடுகின்றார். முருகப்பெருமானிடத்துத் தளராத அன்பு பூண்ட அடியார்களை நாள்கள் கோள்கள் முதலிய பாதிக்கவல்லன அல்ல என்பதைப் பின்வரும் பாசுரம் எடுத்துக் கூறுகின்றது.

"நாளென் செயும் வினைதானென் செயு மெனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்றென்
செயும் குமரேசிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்
டையும சண்முகமும்
தோளும் கடம்பு மெனக்கு
முன்னே வந்து தோன்றிடினே"

கந்தரலங்காரத்தின் பெருமையும் அதனைப் பாராயணம் செய்தலாலடையும் பயனும் மேல்வரும் பாடலிற் கூறப்பட்டுள்ளன.

"சலங்காணும் வேந்தர்தமக்கு மஞ்
சார் யமன சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணுகார் துட்
ட நோயணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும் கந்த நன்னூல்
அலங்கார நூற்றுளொருகவிதான்
கற்றறிந்தவரே"

## தமிழ்வேத பாராயண சங்கம் கோண்டாவில்

நிகழும் தாரண௵ ஆடித்திங்கள் 13ம்நாள் (28-7-44) வெள்ளிக்கிழமை பி. பகல் 4 மணியளவில் கோண்டாவில் சைவ இளைஞர் தமிழ்வேத பாராயண சங்க ஆதரவில், மலர்மாலைகளாலும், மகரதோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வாசிகசாலை மண்டபத்தில் "சுந்தரமூர்த்தி சுவாமிகளின்" குருபூசைத் தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் நால்வர் திருஉருவங்களும் திறந்து வைக்கப்பட்டு விசேட பூசை செய்யப்பட்டது. பின்னர் ஷை சங்கத்தாரால் சிவபுராணம் ஓதப்பட்டதும, 'வெள்ளானைச் சருக்கம்' பயனுடு படிக்கப்பட்டது. பின்பு ஸ்ரீமத் த. அம்பலவாண சுவாமி அவர்களால் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திவ்விய சரிதம் பக்திமயமாகப் பேசப்பட்டது. இடையிடையே தமிழ்மறை ஓதப்பட்டது. இற்றில் தீபாராதனை செய்யப்பட்டு அங்குக் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான அன்பர்களுக்குச் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

இரவு 6 மணியளவில் காரியதரிசி அவர்களின் நன்றிபாராட்டலோடு கூட்டம் இனிது நிறைவேறிற்று.

—கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புக்கள்

நார்மண்டியில் பிரிட்டிஷ் போர் முனையில் விமானத்தாக்குதல் காரணமாக ரோமலுக்குக் காயம் ஏற்பட்டதெனவும் அவர் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே காலமானாரெனவும் ஒரு செய்தி கூறுகிறது.

0 0 0

சென்ற வெள்ளிக்கிழமையன்று பிரிட்டிஷ் மன்னர்பிரான் சிற்றுண்டி அருந்துகையில் இரு ஜெர்மன் சுரங்கவெடிகள் வெடித்தனவென்றும் அவருக்குக் காயமொன்றும் ஏற்படவில்லையென்றும் இத்தாலியிலுள்ள ஐந்தாவது சேனைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்த செய்தி ஒன்று கூறுகின்றது.

0 0 0

கிழக்கு மஞ்சூரியாவில் மூக்டனிலிருந்து 50 மைல் தெற்கே உள்ள கைத்தொழிற்சாலைகளை அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் தாக்கினவாம்.

0 0 0

களுத்துறை நகரிலிருந்து சிறிது தூரத்துக்கப்பால், புதன்கிழமையன்று ஒரு விமானம் நெல்வயலில் விழுந்தது. வயலில் வேலைசெய்தவர்களுக்காவது விமானத்திலிருந்தவர்களுக்காவது காயமேற்படவில்லையாம். ஆனால் அறுவடைக்குப் பக்குவமாயிருந்த நெற்பயிருக்கு அதிகசேதம் விளைந்ததாம்.

0 0 0

அரசினர் உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு உயர்த்தப்பட்ட யுத்த "அலவன்ஸ்" கொடுப்பதற்குக் குறைந்தது 900,000 ரூபாய் தேவைப்படுவதாக அறியப்படுகிறது.

0 0 0

சட்ட விரோதமாக வடிக்கப்பட்ட 33 கலன் 26 டிராம் சாராயத்தை வைத்திருந்ததாக டங்கொட்டுவா வாசியாகிய W. A. லாசறஸ் மீது தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு முனிசிப்பல் மாஜிஸ்டிரேட் திரு. ஐவர் டி சேரம் எதிரிக்கு 1000 ரூபாய் அபராதமும் 6 மாதக் கடுங்காவற்றண்டனையும் விதித்தார்.

0 0 0

கொழும்பிலிருந்து கண்டிக்குப் போன ஒரு இராணுவலொறி புரண்டதினால் 12பேர் காயமடைந்தனராம்.

0 0 0

போலிஷ் தலைநகரத்திலுள்ள கட்டிடங்களைத் தாங்கமுடியாத ஆத்திரத்தால் ஜெர்மானியர் தகர்த்துச் சுட்டெரித்துச் சாம்பலாக்குகின்றனர் என்று ஒருசெய்தி கூறுகிறது.

0 0 0

ஆயிரத்து இருநூற்றுக்கு மேற்பட்ட பறக்கும் கோட்டைகளும் வெடிகுண்டு விமானங்களும் பிரான்ஸிலுள்ள ஜெர்மன் விமான நிலையங்கள் மீது குண்டுகளைச் சொரிந்தனவாம். 18 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டனவாம்.

0 0 0

"இந்தியா மந்திரி பதவிக்குப் புதிதாக ஒருவர் வரவேண்டும். அதற்குப் பிறகுதான் இந்தியப் பிரச்னை தீரும். மிஸ்டர் அமெரி முன்னேற்றத்துக்குப் பெருந்த இடையூறாக இருக்கிறார்" என்று "இவினிங் ஸ்டார்"ப் பத்திரிகை கூறுகிறது.

0 0 0

குற்றங்களைப்பற்றிய சட்டத்தொகுதியிலிருந்து மரணதண்டனை விதிப்பதை நீக்கிவிட இத்தாலிய அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றதாம்.

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

### "எங்களை மறந்துவிடாதீர்கள்"

இரஞ்சிதத்திற்குப் பாலசிங்கன் மீது அகத்தே விருப்பமில்லை யெனினும் அவள் புறத்தே விருப்புடையவள் போல் நடித்து வந்தாள்; பாலசிங்கனுக்கும் அவளுக்குமிடையேயுள்ள சிநேகம் தாய்க்கிழவியின் பலாத்காரத்தினால் ஆக்கப்பட்டது; பாலசிங்கன் தன்னிடத்துள்ள பொருள் பண்டங்களில் ஒருபாகத்தை மதுபானத்தின் பொருட்டும் ஒரு பாகத்தை இந்த இரஞ்சிதத்தின் பொருட்டுஞ் செலவழித்துவிட்டான்; இவளுக்கு உதவப்பட்ட பொருளாலும் பணத்தாலும் நன்மையடைந்தவள் இவளுடைய தாய்க்கிழவியேயாவள்; இந்த மூவருஞ் சென்ற அத்தினத்து அதிகாலைப் போதினிலே, பாலசிங்கன் இரஞ்சிதத்தின் வீட்டையடைந்து இன்ன இன்ன விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று இரஞ்சிதத்தோடும் அவளுடைய தாய்க்கிழவியோடும் ஒழுங்கு செய்திருந்தான். இரஞ்சிதத்தின் மோகவலையில் விசுவநாதனைப் படச்செய்தால், அவன் பின்பு ஒருபோதும் விசாலாட்சியைப்பற்றிச் சிந்திக்கமாட்டானென்பதே பாலசிங்கன் கொண்ட சூழ்ச்சியாகும். பாலசிங்கன்செய்யும் இச்சூழ்ச்சி எவருக்கு நன்மையாய் முடியும் எவருக்குத் தீமையாய் முடியும் என்பதைப்பட்டு இப்பொழுது சொல்லுதல் முடியாது. அன்றிரவு மூவரும் இரஞ்சிதம் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கடற்கரைக்குப் போய் அங்கே சிறுநேரமிருந்து பேசிவிட்டு அவ்விடத்தைவிட்டு மீண்டுபோய்த் தத்தம் இல்லத்தை யடைந்தனர். பாலசிங்கன் தான் செய்யத் துணிந்த புதிய சூழ்ச்சி பலிக்குமோ பலியாதோ என்ற சிந்தனையோடு படுத்துக்கிடந்தான்; வீராசாமி இராமனுண்டாலென்ன; இராவணனுண்டாலென்ன, யார் எக்கேடு கெட்டாலும் நமக்கு மதுபானம் அகப்பட்டால் போதுமென்று கிலேசமின்றிப் படுத்து உறங்கினான், ஆனால் விசுவநாதனுடைய மனம் மாறுபட்டது; இரஞ்சிதத்தைவிட்ட சிந்தனை அவனுள்ளத்திலே தலைப்பட்டது. அவளை முன்னொருபோதும் பார்த்தறியான்; அவளை யொத்தரூபவதியையும் எப்பொழுதாயினுங் கண்டறியான்; விசாலாட்சியின் அழகு, இரஞ்சிதத்தைக் கண்டதன்பின் அவனுள்ளத்திற் பகல் விளக்கெனப்பட்டது. "எங்களை மறந்து விடாதீர்கள்" என இரஞ்சிதம் மொழிந்த இனிய வார்த்தை அவனுடைய செவித்துவாரங்களில் எதிரொலி செய்தபடி நின்றன. அந்த வாக்கியம் அவனுடைய சித்தத்துள் தித்தித்தபடியே புதைந்து கிடந்தது; இரஞ்சிதத்தை இன்னுமொரு முறை தரிசிக்கும் பாக்கியம் எனக்கு எப்பொழுது கிட்டுமோ என்று நினைந்து நினைந்து நெட்டுயிர்த்தான்; "அவளுடைய தரிசனம் இந்தத் துஷ்டர் இருவர் சமுகத்திலே கிட்டுவதனால் என்ன பிரயோசனம்; தன்னந்தனியே அவளிருக்கும்போது அவளைத் தரிசித்தால், அவளோடு வார்த்தையாடினால் அவளுடைய உபசாரணையை நான் பெற்றால், அப்பொழுதல்லவா அவளிடத்துள்ள நலன்களை நான் உள்ளபடி உணர முடியும்" என்று தன்னுள்ளேயே நினைத்துக் கவன்றான். "முடவன் கொம்புத் தேனுக்கு [illegible] டுமோ [illegible] டெனமற" என்று இப்படியான வாக்கியங்களைத் தன்னுள்ளேயே சொல்லி மனந்தளர்ந்தான். அன்றிரவு முழுவதும் விசுவநாதன் உறக்கங்கொண்டிலன்.

### வந்துவிட்டு ஏன் மீளுகிறீர்கள்?

அடுத்தநாள் இரஞ்சிதத்தை ஒருமுறையேனும் தான் தனியே காண வேண்டுமென்வும், அங்ஙனங் காண்பதைப் பாலசிங்கன் வீராசாமியென்னுமிருவரும் அறியவொண்ணாதென்றும் நினைத்துக் கொண்டு, முதனாட் போன அந்த நேரத்திலேயே விசுவநாதன் அந்த இரஞ்சிதம் இருக்கும் வீட்டு மார்க்கமாகப் போனான். போகும்போது தன்வரவை நல்வரவாக இரஞ்சிதம் நினைப்பாளோ என்ற சந்தேகத்தோடும் போவானாயினான்; ஆனால் இரஞ்சிதத்தின் வீட்டிற்குச் சமீபத்திலே சென்றவுடனே அவன் மனம் பயந்தது; கூசியது, "அவள் உண்மையாக என்னிடத்தில் விசேஷ அன்புடையவளாயிருந்தால், அவளும் இந்த நேரத்தில் வந்து தலைவாசலில் என்வரவை எதிர்பார்த்தபடி நிற்கலாமே; அப்படி அவள் நின்றால் அவள்வீட்டிற் பிரவேசிப்பேன், இல்லையேல் வேறெங்கோ செல்வதுபோற் சென்றுவிடுவேன்" என்று நிச்சயம்பண்ணிக்கொண்டு இரஞ்சிதம் வீட்டுக்கெதிரே, அந்தப்பக்கமாகத் திரும்பிப் பார்த்தபடி மெல்ல மெல்லப் போனான். அங்கே எவரையுங் காணவில்லை; இரஞ்சிதம் வந்து நிற்காவிட்டாலும் அவள் வீட்டு வேலைக்காரச் சிறுமியையாவது வந்து பார்த்துக்கொண்டு நிற்கும்படி அவள் செய்திருக்கலாமே; உள்ளன்பிருந்தால் நான் இப்பொழுது நினைத்தபடி செய்திருக்கமாட்டாளோ; அவள் நேற்றுக் கூறிய வார்த்தை உபசார வார்த்தையேயொழிய உள்ளன்புகொண்டு சொன்ன வார்த்தையல்ல, அன்பிலாதவர்மீதிலே கொள்ளும் ஆசையும் ஒரு ஆசையா," என்று தன்னுள்ளே சிந்தித்துத் தயங்கி அவன் அவ்விடத்தைவிட்டகல முயலும்போது, "வந்துவிட்டு ஏன் மீண்டு போகிறீர்கள்" என்ற இனிய வார்த்தை அத்தலைவாசலிலுள்ள சாளரமூலமாக வெளிவந்து விசுவநாதன் காதிற் பட்டது; அவ்வார்த்தை இரஞ்சிதத்தின் வார்த்தையென அறிய அவனுக்குப் புலப்பட்டது; கேட்டமாத்திரத்தே அவன் மகிழ்ச்சியோடு சென்று தலைவாசலிற் பிரவேசித்தான்; அங்கே எவருங் காணப்படவில்லை; தானெண்ணிய எண்ணந்தான் இப்படித் தன் காதிலே அவள் வார்த்தைபோலக் கேட்டதோ என்று தன் காதுகளின்மீதும் சந்தேகங் கொண்டான்; அந்த இடத்திலே அவன் நிற்கவும் முடியாமல், உட்செல்லவும் முடியாமல் தேக்கமுற்று நின்றான்; அவன் சிந்தை தியங்கியபடி நிற்கும்போது, முதனாள் வந்த சிறுமியே முற்பட்டு வந்து "ஐயா, உங்களை உள்ளே வரும்படி சொல்லுகிறார்கள்" என்னலும் விசுவநாதன் உள்ளம் ஆநந்தமடைந்து உள்ளே மண்டபத்தை அடைந்தான்; அந்தச் சிறுமி அவனைப் பின்தொடர்ந்து போய் ஒரு ஸோபாவைக் காட்டி "இப்படி இருங்கள் ஐயா" என்று சொல்ல அவன் அப்படியே இருந்தான். அங்ஙனமாக ஐந்து நிமிஷநேரத்தில் மனோரஞ்சிதம் அங்கு அன்னமென நடந்து மெல்லென ஒதுங்கி, "இப்பொழுதுதானே வந்தீர்கள்" என்று குயில்போல மொழிந்து நாணமேலீட்டினால் போலும் தலைகுனிந்து பூங்கொம்பு [illegible] நின்றாள். அவள் அங்ஙனம் நிற்பதைக்

## அறிவுரைத் திரட்டு

1. அன்பே மனிதனுடைய அரும் பொருளாகும்.

2. ஆயுள் முடிவுள்ளது; ஆத்மா முடிவில்லாதது.

3. எல்லாச் சக்தியும் நம்மிடத்திலிருக்கிறது. நாம் எந்தக் காரியத்தையும் எளிதிற் செய்து முடிக்கலாம்.

4. நம்முள் இருக்கும் தெய்வத் தன்மையை நாம் சிறிதும் அறியாமலிருக்கிறோம்.

5. மனிதசேவையைக் கடவுள் வழிபாடு என மதித்துச் செய்.

கண்ட விசுவநாதன் தன் இருக்கை விட்டெழுந்து "ஏன் நிற்பான், நிற்கவேண்டாம் உப்படி அமரும்" என்று ஆனந்த பரவசனாய்ச் சொல்ல, "இல்லை, நீங்கள் இருங்கள், பின் நான் இருக்கிறேன்" என்று அவள் கூற விசுவநாதன் பழையபடியிருந்தான்; அவளும் அயலேயுள்ள ஒரு 'ஸோபாவில்' அமர்ந்தாள். சில நிமிஷம் இருவரும் யாதும் வார்த்தையாடிலர். இருவரும் யார் முதற் பேசுவதென்பதையிட்டுச் சிறிதுநேரம் தனித்தனி யோசித்தனர்; ஈற்றில் இரஞ்சிதமே பேச ஆரம்பித்தாள்; 'நாலு மணிதொடக்கம் உங்களுடைய வரவை எதிர்பார்த்தபடி இடையிடையே தலைவாசலில் வந்து பார்த்து நின்றேன்; நீங்களும் என் கேள்விக்கிசைந்து இப்பொழுது வந்து சேர்ந்தீர்கள்; நான் நேற்றுச் சொன்ன சொல்லின் குறிப்பையறிந்து என்னைப் பொருட்படுத்தி, தன்னந்தனியே இந்தச் சமயத்தில் என்னிடம் அன்புகொண்டு வந்த உங்கள் ஆதரவையும் குறிப்பறியுந் திறமையையும் நான் மெச்சாமல் இருக்கமுடியாது" என்று ஓரே வசனமாக உயர்ந்த தமிழ் வசனநடையில் உபசாரங்கூறினாள் இரஞ்சிதம்; கேட்ட விசுவநாதன் அகமகிழ்ந்தான். "நேற்று நான் முதன்முதல் இங்கே வந்தபோது குறிப்பாக என்னிடத்திற் பாராட்டிய அபிமானமும் அன்பும் இன்று உமமுடைய வீடுதேடி வரும்படி என்னைத் தூண்டிவிட்டன; ஆனாலும் நான் இங்கு அதிகநேரம் தாமதித்திருக்க என்மனம் இடந்தரவில்லை; காரணம் வேறொன்றுமல்ல, என்னுடைய நண்பரிருவரும் நான் இப்படி வந்தேனென்பதையுணர்ந்தால் என்மீது தீராச்சந்தேகமும் பொறாமையுங் கொள்வர்; ஆனதினால்தான் சொல்லுகிறேன்" என்றான்; "அதை நானும் அறிவேன், உங்களிடத்தில் மாத்திரமல்ல, என்மீதும் அவர்கள் சந்தேகப்படுவர்; ஆனால் அவர்களுடைய கூட்டுறவு உங்களுக்கெப்படிக் கிடைத்ததென்பதைப்பற்றித்தான் ஆச்சரியப்படுகிறேன்; உங்களோடு சிலவிஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு உத்தேசித்திருக்கிறேன்; ஆனால் இது சமயமல்ல, இன்னொருமுறை சந்திக்கும்போது தெரிவித்துக்கொள்ளுவேன்; நீங்கள் இன்று இங்கே வந்தது இப்பொழுதைக்கு இரகசியமாக இருக்கட்டும்; உங்களை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று இப்படி இரஞ்சிதம் பேசிக்கொண்டிருக்கும்போது வேலைக்காரச் சிறுமி தாம்பூலத்தட்டை அவள் முன்னிலையிற் பணிவுடன் கொண்டுவந்து வைக்க இரஞ்சிதமே வெற்றிலைபாக்கு மடித்துக்கொடுக்க அவன் வாங்கி அருந்தி அவளையும் அருந்தச் செய்து இன்னொருமுறை வருவதாகச் சொல்லி அவளிடம் விடைபெற்றுத் தலைவாசலைக் கடந்து தெருவில் இறங்கும்போது பாலசிங்கனும் எதிரில் வந்தான்.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலட்சுமி விரத மகத்துவம்

(பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், சுதுமலை)

வரலட்சுமி விரதம் சாந்திரமானப்படியான ஆவணிமாச சுத்தப் பூரணைக்கு முன்வரும் அடுத்த வெள்ளிக்கிழமை முதற்றொடங்கி அனுஷ்டிக்கவேண்டிய விரதமாம். அஃதாவது வளர்பிறையில் இரண்டு வெள்ளி வந்தால் பின்வரும் வெள்ளியேயென்பது கருத்து. இதன் தாற்பரியம்:—

முன்னொரு காலத்திலே ஸ்ரீ கைலாசபதி உமாதேவியாரோடு ஓர் திருவிளையாட்டாகச் சூதாடிக்கொண்டிருக்கும்போது உமாதேவியார் வென்றதாகவும் கைலாசபதி தோற்றதாகவும், மத்தியஸ்தனாயிருந்த சித்திரசேமி என்னுங் கணநாதன் நடுநிலை தவறிக் கைலாசபதியே வென்றதாகப் பொய்சொன்னதால் உமாதேவியார் வெகுண்டு நீ பொய்சொல்லியபெரும் பாவத்தால் பூமியிலே குஷ்டரோகியாகப் போகக்கடவையென்று சபிக்க, அவனுடைய பிரார்த்தனைக்கிணங்கி புண்ணிய தீர்த்தக் கரையில் தேவமாதர் தவஞ்செய்கின்றனர் அவர்களைக் கண்டு அவர்கள் கூறியபடி வரலட்சுமி விரதத்தை அனுஷ்டிப்பாயாகில் இச்சாபம் தீருமென்றனர். அவ்வாறே அவன் பூமியில் புண்ணிய தீர்த்தக் கரையையடைந்து தேவமாதரைக் கண்டான். அவன் அவர்களைக் கண்டு பணிந்து நீவிர் செய்யும் பூசை யாது? இதன் பிரயோசனமென்ன? என்று வினவினான்; எவனால் இத்துன்பம் நீங்குமவனனுஞ் செய்ய வேண்டிய கருமமென்ன? இம்மை மறுமைப் பலனையடையும் விதமென்ன? என்றும் வினவினான்.

அப்போ அவர்கள் சொன்னதாவது:- நாம் அனுஷ்டிக்கும் விரதம் வரலட்சுமி விரதம் பூசை வழிபாடு என்பனவுகளாம், இவ்விரதத்தை அனுஷ்டித்தால் விரும்பிய சுகசம்பத்துகளெல்லாம் கிடைக்குமென்று போதிக்க, அவன் அவ்வாறனுஷ்டித்துக் குஷ்டரோகம் நீங்கப்பெற்றுச் சம்பத்தையும் பெற்றுக் கைலாயம் போய்ச் சேர்ந்தான் என்பதே இச்சரித்திரச் சுருக்கம்.

சகல சம்பத்தையும் விரும்பியவர்கள் தமது வீட்டில் மண்டபமமைத்துச் சுவர்ணத்தாலே வரலட்சுமி விக்கிரகமமைத்து அபிஷேகம் பூசை தானதருமம் இவைகளைச் செய்து முன்குறித்த தினமுதல் ஒவ்வொரு வாரத்திலும் குறைந்த கணக்கு ஓராண்டுக்காயினும் தவறாது அனுஷ்டித்தவர்கள் விரும்பிய புத்திரபாக்கியங்களோடு சகல சம்பத்துக்களையுமடைவார்கள். பெரும்பாலும் பெண்களே அனுஷ்டிக்க வேண்டியது.

இந்தச் சூதாட்டம் ஒரு கற்பத்திலும் விஷ்ணுவைச் சாட்சியாக வைத்துச் சூதாடியது ஒரு கற்பமென யூகிக்கவேண்டியிருக்கிறது. சமயவர்களைப்போல இவர்கள் சூதாடவில்லை, நியாயம் மறுமுறை வரும்.

## 21 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கின

கடற்படை மந்திரி காரியாலய அறிக்கை கூறுவதாவது:- பிரிட்டிஷ் நீர்மூழ்கிகள் ஜப்பானியக் கப்பல்களின்மீது தீவிரமாகப் போர் நடவடிக்கை எடுத்து வருகின்றன. சமீபத்தில் அவை மற்றும் 21 கப்பல்களைத் தூரகிழக்குத்திசைக்கடலில் மூழ்கடித்தன. பிரங்கிப் பிரயோகத்தினால் ஒரு சிறிய எண்ணெய்க் கப்பல் பழுதேதமடைந்தது. சுமாத்திராவின் வடமேற்குக் கரையில் உள்ள ஸிபோல்கா என்றவிடத்திலுள்ள எண்ணெய்க் குதங்களையும் ராஜ்த்தின் வடபாகத்திலுள்ள ராணுவ நிலையங்களையும் அந்தமான் தீவிலுள்ள போர்ட்பிளேர் என்ற துறைமுகத்தையும் நமது நீர்மூழ்கிகள் பிரங்கிப் பிரயோகஞ்செய்து தாக்கின.

## கொழும்பு நகரில் வேடன்

### கொழும்பு "அப்ஸேவர்ப்" பத்திரிகையின் நிருபர் தெரிவிப்பது

பொலன்னறுவை நகரத்திலிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் கினிடாமன, கோலகணவாடிய என்னுங் கிராமங்களில் வசிக்கும் வேடர் கூப்பன் தொடங்குவதற்கு முன்னரும் அரிசியைத் தங்களது முக்கிய உணவுப்பொருளாக வைத்திருக்கவில்லை. இவர்களுடைய முக்கிய உணவுப்பொருள் சோழமும் வேறுசில தானியங்களுமாம்.

அவர்களுடைய தலைவனான கப்புவா, வெற்றிலையருந்துவது தேநீர் அருந்துவது முதலியவை தங்களது நாட்டுக்குப் புதிதாக வந்த மாற்றங்களாகும் என்று கூறினான். கப்புவாவினது மகன் காணாமற்போய் விட்டானென்றும், அவனிருக்கும் இடத்தைப்பற்றி ஒரு சோதிடரிடம் விசாரிப்பதற்காக அந்தக் கப்புவா கொழும்புக்கு வந்தானென்றும் தெரிகிறது.

ஒருமாதத்துக்குமுன்பு அவனுடைய மகன் தேன் எடுப்பதற்குச் சென்றானென்றும் பின் மீண்டு வரவில்லையென்றும் தெரிகிறது. அவர்கள் காடுமுழுவதும் அவனைத் தேடியும் கண்டுபிடிக்கமுடியவில்லை. அந்தக் கப்புவா ஒரு சோதிடரைக் கேட்பதற்காகக் கொழும்புக்கு வந்தான்.

கப்புவாவினது தோள்கள் அகன்று விரிந்துள்ளன. கரங்கள் நீளமுடையன. நான் அவனைக் காணும்போது ஒரு சிறிய துண்டு உடுத்திருந்தான். அவனுடைய முகத்தின் இடது பக்கத்தில் ஒரு (காயம்) அடையாளம் இருந்தது.

கப்புவா அந்தக்காயம் ஒரு கரடியால் ஏற்பட்டதென்று சொன்னான். ஒருநாள் தான் தேன் எடுக்கச் சென்றபொழுது பற்றையில் இருந்து ஒருகரடி வந்தது. அது இவனை எதிர்த்தது. உடனே இரண்டு அடி கொடுத்தான். அந்தக் கரடி ஓடுவதற்குமுன் இவனைக் காயப்படுத்திவிட்டது.

"அந்தப்பகுதியில்தானே முதலதரமான வேட்டைக்காரன் என்றும் 50 கரடிகளையும் 36 புலிகளையும் கொன்றதாக எனக்குச் சொன்னான், தான் இப்பொழுது கொழும்பைக் கண்டுவிட்டதாகவும் இனித் தன் உயிரை விடலாமென்றும் சொன்னான். கொழும்பு நகரத்தைப்பற்றித் தாங்கள் கேள்விப்பட்டதாகவும் அந்நகரத்துக்குத் தான் வருவதாகக் கனவிலும் நினைக்கவில்லையென்றும் கொழும்பு நகரத்தில் பெண்கள் துவிச்சக்கரவண்டிகளில் ஓடுவது தனக்கு ஆச்சரியத்தை விளைவித்ததென்றும் கூறினான்.

அவன் துறைமுகத்தில் கப்பலைக் கண்டவுடன் தங்கள் வீடுகளிலும் பார்க்க பெரிய கப்பல்கள் தண்ணீரில் மிதக்கின்றனவே என்று நினைத்து ஆச்சரியப்பட்டான். விதவிதமான உணவுப் பொருள்கள் அவனுக்கு வழங்கப்பட்டன. கப்புவாவுக்கு 5 பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண்பிள்ளைகளும் உள்ளனர். தான் ஊருக்குச் சென்றவுடன் அங்குள்ளவர்களுக்கு அற்புதமான கதைகள் சொல்லுவதாகச் சொன்னான்.

## திரிகோணமலைப் பாடசாலைகளின் வரவுவாரவிழா

திரிகோணமலைப் பாடசாலைகளின் வரவுவாரக் கொண்டாட்டம் 24-7.44 திங்கட்கிழமை எல்லாப் பாடசாலைகளிலும் வெகு ஆரவாரத்துடன் தொடங்கியது. வரவுத்தியோகஸ்தன் திரு. என். அகஸ்ற்றீன் இந்த வரவு வாரத்தை முறையாகவும் வெகு திறமையாகவும் நடாத்திப் பாடசாலைகளிலும் பகிரங்க கிழலிடங்களிலும் சொற்பொழிவுகள் ஆற்றி அரசினர்! இந்து! கத்தோலிக்க! கிறீஸ்தவ பாடசாலைகளின் ஊக்கமுள்ள ஒத்துழைப்பைப் பெற்று ஆடல்பாடல்களுடன் ஊர்வலங்கள் செய்வித்தும் பெற்றோரையும் பிள்ளைகளையும் மகிழ்வித்து ஊக்குவித்தார். வரவு வார நிகழ்ச்சிகள் 28-7.44 வெள்ளிவாரம் நிறைவெய்தின. இவ்வாரத்தில் புதிய மாணவர்கள் பலர் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர். வரவு எழுபது முதல் தொண்ணூறு, தொண்ணூற்றிமூன்று வீதம் வரையும் உயர்ந்து நிற்கின்றது.

—கடித.

## தாவடி சைவ இளைஞர் சங்கம்

நிகழும் தாரணஹு ஆடிமீ 13-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் ஷை சங்க ஸ்ரீ கணேச வாசிகசாலையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை பிரம்ம ஸ்ரீ அ. கணேசக் குருக்களவர்களால் சிறப்பாகச் செய்யப்பட்டது.

பின்பு ஆசிரியர் திரு செ. சிவப்பிரகாசம் சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரத்தைச்சபையோர் அன்புகூர்ந்து மகிழும்படி உபந்நியாசஞ் செய்தார்.

பின்பு சபையோருக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டு 10 மணியளவில கூட்டம் இனிது நிறைவெய்தியது

—கடித.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

நிகழும் ஆடி மீ 13ம் திகதி (28.7.44) வெள்ளிக்கிழமையன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை கொழும்பு விவேகானந்த சபையாரால் மேட்டுத்தெருவிலுள்ள சபைமண்டபத்தில் நடத்தப்பட்டது. சபையின் பூஜாக்கிருகத்தில் பூசைநிகழ்ந்தபின் திரு. ஆ. க. தம்பிமுத்துஅவர்கள் சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச் செய்த தேவாரத்திருப்பாசுரங்கள் சிலவற்றைப் பாராயணம் செய்தனர். அதன்பின் பிரம ஸ்ரீ. சா. அப்புக்குருக்களவர்களும் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களும் சுவாமிகள் வாழ்க்கையையும் சேவையையும் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தினர். பின்னர்ச் சபையில் குழுமியிருந்தஅன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டதும் கூட்டம் தேவாரபாராயணத்துடன் முடிவெய்தியது

நிகழும் ஆடிமீ 14உ (29-7-44) சனிக்கிழமையன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விவேகானந்தசபையின் ஆதரவில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய நிகழ்ச்சிகட்கு ஸ்ரீமத் விபுலானந்த சுவாமிகள் தலைமை வகித்தனர். நிகழ்ச்சிகள் பூசையுடன் ஆரம்பமாயின. தலைவரவர்களும் திரு. வி. செல்வநாயகமவர்களும், பிரமஸ்ரீ கி. இலக்குமண ஐயரவர்களும் சுவாமிகளதும் அவரருளிய தேவாரத்திருமுறைகளதும் அருமை பெருமைகளை எடுத்துப் பாராட்டிப் பேசினார்கள். திரு. க. குமாரகுலசிங்க மவர்கள் சுவாமிகளருளிச் செய்த தேவாரங்களுட் சிலவற்றைப் பாராயணம் செய்தனர். இறுதியில் பிரசாரகர்கட்கு நன்றி கூறப்பட்டதும் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

கடித

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் பருத்தித்துறை பழ. சோம. கபிலாயநாதன் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்,

| நம். | தி. | ரூ. | சதம் | ஊர் | பெயர் | நகை |
|---|---|---|---|---|---|---|
| | 1943ம் ஆண்டு மார்ச்சுமீ | | | | | |
| 1258 | 9 | 25 | 00 | பருத்தித்துறை | த. நவரத்தினராஜா | பொன் இமிகல் பூரேச்சு 1 |
| | யூன்மீ | | | | | |
| 1901 | 23 | 15 | 00 | புலோலி மேற்கு | க. சோமசுந்தரம் | பொன் கிலாவர் மோதிரம் 1 |

விற்பனவு நிகழும் தாரணவருஷம் ஆகஸ்டு மாசம் 19ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குமேல் எடுபட்ட நகை புறநீங்கலாக மிகுதி பருத்தித்துறையில் அடைவுவைக்கப்பட்டுத் தவணைதப்பிய நகைகள் வண் கிழக்கிலுள்ள ஷையார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்தீஸ் மேஸ்தர்

Mis 87 31&3-8-44

உங்கள் கண்கள் விஸலயுயர்ந்தவை
உங்கள் கண்ணாடிகளைக் கீழ்க்காணும்
பிரசித்திபெற்ற கம்பெனியில்
வாங்குங்கள்!
வீனஸ் ஓப்ரிக்கல் கம்பெனி
28, மெயின் ஸ்ட்ரீட், யாழ்ப்பாணம்.
Mis 60 31—7—44&.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors- the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 3, August, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org